கனம் திரு. பூ. கக்கன் : உடனடியாக என்னென்ன உதவிகள் செய்யவேண்டுமோ அவைகளைச் செய்து விட்டார்கள். பின்னால் கலெக்டர் அவர்கள் பார்த்து விசாரணை செய்து, கலெக்டர் சிபாரிசு ஏற்றுக்கொண்டு அரசாங்கம் முடிவு செய்யலாம் என்று இருக்கிறது. கொடுப்பது என்று சொன்னால் விவரம் இல்லாமல் கொடுக்க முடியாது. எல்லாவற்றையும் பார்த்துத் தான் கொடுக்க முடியும்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, பாதிக்கப் பட்ட போலீஸ்காரர்களுக்கு உதவித்தொகை கொடுக்கப்பட்டதாக அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறதே, இலாகாவிலே பாதிக்கப் பட்டவர்களுக்குக் கொடுப்பதற்காக பெனவலண்ட் ஃபண்ட் இருக் கிறதே, அதிலிருந்து ஏதாவது கொடுக்கப்பட்டிருக்கிறதா ?

கனம் திரு. பூ. கக்கன் : அதிலிருந்தும் கொடுக்கப்பட்டிருக் கிறது.

கள்ளநோட்டு வழக்குகள்

*348 கேள்வி.—**திரு. எம். எஸ். மணி :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) 1963, 1964, 1965-ம் ஆண்டுகளில் தமிழ் நாட்டில் தொடரப்பட்ட கள்ள நோட்டு தயாரிப்பு வழக்குகள் எத்தனை ?

(இ) அவைகளுள், தண்டனையில் முடிந்த, விடுதலையில் முடிந்த வழக்குகள் முறையே எத்தனை ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) 1963—2.
1964—3.
1965—1.

(30—6—1965 வரை)

(இ)

	1963	1964	1965
தண்டிக்கப்பெற்றவை	1	3	..
விடுதலை பெற்றது	1	..	..

திரு. வி. எஸ். எஸ். மணி : ஸார், ஒன்றுக்கு இரண்டாகக் கொடுப்பதாகச் சொல்லி ஏமாற்றும் கூட்டம் தமிழ்நாட்டில் பரவி யிருப்பதாகத் தெரிகிறது. இதைத் தடுக்க அரசாங்கம் என்ன முயற்சி எடுத்திருக்கிறது என்று அறியலாமா ?

கனம் திரு. பூ. கக்கன் : எங்கெல்லாம் இந்த மாதிரிக் குற்றங்கள் காணப்படுகின்றனவோ அவைகளை கவனித்துத் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று ஜில்லா போலீஸ் அதிகாரிகளுக்குக் குறிப் பாக ஐ. ஜி. அவர்கள் தக்க கட்டளை அனுப்பியிருக்கிறார்கள். அதன்படி தான் குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டு தண்டிக்கப் பட்டிருக்கிறார்கள் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இந்த கள்ளநோட்டு தயாரிப்பு வழக்கோடு கள்ள நோட்டு இரட்டிப்பு வழக்குகளும் பெருகி போலீஸ் இலாகாவினரே சில வழக்குகளில் ஈடுபட்டிருக்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

8th November 1965]

கிறார்கள். காரணம், போலீஸ் உடையோடு போய் கள்ள நோட்டு வழக்கில் சிக்கியிருப்பது தான். இதைத் தடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறதா ?

கனம் திரு. பூ. கக்கன் : நோட்டுகளில் திருட்டு நோட்டைப் பிடிப்பது மட்டுமல்ல, இதில் ஈடுபட்டவர்களைப் பிடித்து தக்க நடவடிக்கை எடுத்து தண்டிக்கவேண்டும் என்பது தான் நோக்கம். எப்படி இதைத் தடுக்க வேண்டுமோ அந்த முறையில் தடுக்க அரசாங்கம் கவனம் செலுத்தி, சீரியசாக, விசேஷமாக கவனிக்க வேண்டும் என்று ஏற்பாடு செய்திருக்கிறது.

திரு. கரு. சீமைச்சாமி : இந்த கள்ள நோட்டில் சம்பந்தப்பட்டவர்கள் நோட்டுகளை அச்சிட்டு லட்சம் லட்சமாகச் சம்பாதித்த பிறகு கேஸ் போடப்பட்டு தண்டிக்கப்படுகிறார்கள். தண்டனை பெற்று 2-3 வருஷம் சிறையில் இருந்து விட்டு வந்து விடுகிறார்கள். அவர்களுடைய சொத்துக்களை ஏன் பறிமுதல் செய்யக்கூடாது என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : இப்பேர்ப்பட்ட குற்றங்களைச் செய்கிறவர்களுக்கு ஜன்ம தண்டனை கொடுக்கவேண்டுமென்று இருக்கிறது. நீதி ஸ்தலத்தில் அவர்கள் பார்த்து தண்டனை கொடுக்கிறார்கள். அவர்கள் சொல்லுவதைக் கட்டுப்படுத்த முடியாது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. செ. மாதவன் : கள்ள நோட்டு தயாரிப்பு, நோட்டு இரட்டிப்பு இவைகளில் பெரும்பாலும் கேரள மாநிலத்தைச் சேர்ந்தவர்களோடு தொடர்பு கொண்டு செய்கிற காரணத்தினால் அந்த மாநில அரசாங்கத்தோடு தொடர்பு கொண்டு அதைத் தடுக்க என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன ?

கனம் திரு. பூ. கக்கன் : கேரள மாநிலம், தமிழ் மாநிலம் என்பதல்ல. நம் மாநிலத்திலேயும் குற்றங்கள் நடைபெற்றிருக்கின்றன. தக்க நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். அவைகள் என்ன என்ன என்று சொல்ல முடியாது.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : கள்ள நோட்டு வழக்குகளில் 1963, 1964, 1965 ஆகிய ஆண்டுகளில் எந்தெந்த நோட்டுகளைத் தயாரித்ததாகக் கண்டுபிடிக்கப்பட்டது ? எவ்வளவு நோட்டுகளை அரசாங்கம் கண்டுபிடித்துக் கைப்பற்றி இருக்கிறது என்று கூற முடியுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : இந்தக் கேள்விக்குச் சரியான பதில் கிடைக்கவேண்டுமானால், தனியாகக் கேள்வி போட்டால் சொல்லலாம்.

திரு. கோ. சி. மணி : அமைச்சர் அவர்கள் கொடுத்த எண்ணிக்கையில் கள்ள காயின்ஸ் அடித்த வழக்குகளும் வருமா ? அல்லது அது தனியாக இருக்குமா ?

கனம் திரு. பூ. கக்கன் : அந்தத் தகவல் இப்போது என்னிடத்தில் இல்லை.

திரு. ஜே. மாதா கவுடர் : தமாஷா வரி போன்ற வரியைக் கொடுக்காமல் ஏமாற்றினாலேயே குறைந்தபட்சம் இன்ன தண்டனை என்று சட்டம் செய்தோமே, கள்ளநோட்டு அடித்தால் குறைந்த பட்சம் மரண தண்டனை என்று ஏன் சட்டம் இயற்றக் கூடாது (சிரிப்பு).

கனம் சபாநாயகர் : இதைப்பற்றிக் கேள்வி நேரத்தில் கேட்டுப் பிரயோசனம் இல்லை. அதற்குத் தனியாகச் சட்டம் கொண்டு வரவேண்டும்.

திரு. ம. கமலநாதன் : கள்ள நோட்டு அடிக்கப்பட்ட வழக்குகள்தான் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன. அடிக்கப்பட்ட நோட்டுகளுக்கும் ஒரிஜினல் நோட்டுக்கும் எந்தவித வித்தியாசமும் இல்லாத காரணத்தினால் அந்த நோட்டுக்களை வாங்க மறுக்கக் கூடாது என்று பாங்குகளுக்கு அரசாங்கம் ஏதாவது உத்திரவிட்டுள்ளதா ?

கனம் திரு. பூ. கக்கன் : அதற்குத் தனியாகக் கேள்வி போட வேண்டும்.

திரு. செ. மாதவன் : சிறை தண்டனை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இப்பேர்ப்பட்ட குற்றங்கள் பெருகி வருகிற காரணத்தினால் சட்ட இலாகா பரிசீலித்து ஸ்பெஷல் லெஜிஸ்லேஷன் கொண்டு வர அரசாங்கம் முயற்சிக்குமா?

THE HON. P. KAKKAN : I want a separate question.

Home Guards

* 349 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether there is any proposal before the Government to give intensive training to Home Guards in the State; and

(*b*) if so, the details thereof ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) ஊர்க்காவல் படையினருக்கு முனைப்பாக மேலும் பயிற்சியளிக்கும் திட்டம் ஒன்று போலீஸ் இன்ஸ்பெக்டர்-ஜெனரலின் ஆலோசனையில் உள்ளது. மாவட்டங்களில் உதவிப் பிரிவுத் தலைவர்கள் (Assistant Section Leaders) தகுதிக்கு மேற்பட்ட ஊர்க்காவல் படை அதிகாரிகளுக்கு மேல் நிலைப் படிப்பில் பயிற்சியளிக்கும் திட்டமும் அவரது ஆலோசனையிலுள்ளது.

(இ) கீழ்க்கண்ட பாடங்களில் விரிவுரைகளும் செய்முறையும் இந்த மேல்நிலைப் படிப்பில் அடங்கியுள்ளன :—

1. அமைப்பு முறையும் நிர்வாகமும்.
2. சிவில் பாதுகாப்பு நடவக்கைகள்.